நாள்: 20.03.2023
OS.214/2016
பெயர்: சதீஸ்குமார்
வா.சா.1

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ சிவில் இஞ்ஜினியர் படித்துள்ளேன். 04.02.2016ம் தேதிக்கு முன்பு 1ம் பிரதிவாதியிடம் எந்த வரவு செலவு இருந்ததா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியும் நானும் உறவினர் இல்லை. அவரும் நானும் சேர்ந்து தொழில் செய்தோமா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரரும் தேனியில் பொன்முருகன் என்ற ஹோட்டல் வைத்து நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். கீழ்தளத்தில் ஹோட்டல் உள்ளது என்றும், மேல்தளத்தில் நான் ஜோதிடம் பார்த்து வந்தேன் என்றால் சரியல்ல. அவர்கள் கடையில் நான் வாடகைக்கு இருந்தேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி எதனடிப்படையில் எனக்கு பழக்கம் என்று பிராதிலோ நிருபண வாக்கு மூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் நான் வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அனுப்பியுள்ளேன். நான் சொல்வதுபோல் வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றும், நான் அனுப்பியிருந்தால் தேதி மாதம் வருடம் குறிப்பிட்டு பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் சரியலல. நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் தொழில் செய்து வருகிறேன். எனக்கு மாதம் வருமானம் எவ்வளவு வருகிறது என்றும், அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளது பற்றி பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நான் வருமான வரிக்கணக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு 04.02.2014ம் தேதி பணம் கொடுத்ததற்கு வருமான வரிக்கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.சமூகம் நீதிமன்றத்தில் IA.703/2016 உடன் ஜப்தி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் 1ம் பிரதிவாதியின் உடன் பிறநத சகோதரர்களான பொன் நாகராஜன், பொன் கணேஷ், பொன் முருகன் ஆகியோர்களை உத்தேச கட்சிக்காரர்களாக சேர்க்கச்சொல்லி மனு தாக்கல் செய்து மேற்படி மனு 19.08.2017ல் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இடைக்கால மனுவில் கட்சிக்காரராக சேர்க்காமல் அசல் வழக்கில் மட்டும் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக 1ம் பிரதிவாதி 18.03.2021ம் தேதியில் சமுகம் நீதிமன்றத்தில் ஒரு மெமோ தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நிருபண வாக்குமூலம் 4வது பாராவில் IA.50/2017 அசல் வழக்கை திருத்தம் செய்யச்சொல்லி அனுமதிக்கப்படவில்லை என்றும், IA.703/2016 மனுவை திருத்தம் செய்யச்சொல்லி தான் மனு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புரோநோட்டு வழக்கிற்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் அவசியமற்ற கட்சிக்காரராக இந்த வழக்கில் சேர்க்கப் பட்டுள்ளதால்

இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பெயர் சிவக்குமார் என்றும், அவர் பத்திரங்களில் பொன் சிவக்குமார் என்றுதான் கையொப்பம் போடுவார் என்றும், அவருடைய பள்ளிச்சான்றிதழ்களில் சிவக்குமார் என்று தான் உள்ளது என்றும், நான் தவறுதலாக அவர் பெயரை மோசடியாக பொன் சிவா என்று போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 08.04.2013ம் தேதியில் பதிவு செய்த பத்திரத்தில் 1ம் பிரதிவாதியின் கையெழுத்து பொன் சிவக்குமார் என்று இருப்பதை நிரூபணம் செய்வதற்கு IA.51/2017 மனுவை 18.03.2021ம் தேதியில் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புரோநோட்டில் என்ன மையால் கையெழுத்து போடப்பட்டது என்றால் புளு கலர் மையால் கையெழுத்து போட்டுள்ளார். எனது வீட்டில் வைத்து பணம் கொடுக்கும்போது வேறு யார் இருந்தார்கள் என்றால் மூன்று பேர் இருந்தார்கள். 04.02.2014ம் தேதி என்னிடம் பணம் கேட்டு அன்றைய தேதியிலேயே பணம் கொடுத்தேனா என்றால் 15 தினங்களுக்கு முன்பே 1ம் பிரதிவாதி கேட்டார். 1ம் பிரதிவாதி அவ்வாறு கேட்பதற்கு அவர் எனக்கு உறவினர் இல்லை, பழக்கம் இல்லை என்றால் பழக்கம் இருந்தது. 1ம் பிரதிவாதிக்கு பணம் கொடுத்த விபரம் அவரது சகோதரர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். உத்தமபாளையம் DSP ஆபிசில் யார் மீது புகார் கொடுத்தேன் என்றால் 1ம் பிரதிவாதி மீது புகார் கொடுத்தேன். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 14.02.2014ம் தேதி இரண்டு காசோலைகள் கொடுத்தார். காசோலைகள் சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்போ நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புரோநோட்டு வழக்கு இருந்ததால் காசோலை வழக்கு தாக்கல் செய்யவில்லை. அந்த காசோலைகளை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். அந்த காசோலைகளில் உள் ளகையெழுத்தும் புரோநோட்டில் உள்ள கையெழுத்தையும் பார்த்தால் எது உண்மை என்று தெரியும் என்றால் என்னிடம் எவ்வாறு எழுதிக்கொடுத்தாரோ அதேபோல் உள்ளது. தாக்கல் செய்ய தாயராக உள்ளேன். மேற்சொன்ன விபரத்தை பிராதிலும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த காசோலை சம்மந்தமாக விரைவு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய உள்ளேன். 1ம் பிரதிவாதியின் கையெழுத்தே இல்லாமல் வா.சா.ஆ.1 தயார் செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் ஹோட்டலில் மேல்தளத்தில் நான் ஜோதிடம் பார்த்தேன் என்றும் அந்த விபரத்தை மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள சாட்சிகள் எனக்கு வேண்டியவர்கள் என்றால் சரியல்ல. இரண்டு பேர்களுமே வேண்டியவர்கள். பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் குறிப்பிட்டுள்ள தொகையை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதியில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும் எனக்கும் என்ன

பழக்க வழக்கம் என்று என்னால் சரிவர சொல்ல இயலாத காரணத்தினால் நான் தாவாவில் குறிப்பிட்டுள் ளபெரிய தொகை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாமல் அவசரமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் வரவு செலவு இருந்திருந்தால் காசோலைகள் சம்மந்தமாகவும், DSP ஆபிசில் நடந்த சம்மந்தமாகவும் பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு கூறாத காரணத்தினாலும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யாத காரணத்தினாலம், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.